Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

புதுப்பாக்கம் ஊராட்சி மன்ற தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.சா.பாபு

ந.க.எண். 1449 /2017/ஆ1- நாள். 12.01.2018

பொருள் - திட்ட அனுமதி - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.243/3E1, 3E2, 3F1A2, 252/1-ல் 34350ச.மீ பரப்பளவு இடத்தில் Tower – 1, 2, 3, 4, Club House கொண்ட பலமாடி குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.அரசுஆணைஎண்.235 நாள்.19.08.97.
2. மனுதாரர் Mr.R.Damodran என்பவரின் ஆவணங்களுடன் கூடிய கடிதம்.
3.உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.42/2012/ மாஉதிகு நாள் 27.06.2013.
4.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/09/பிஏ2, நாள்.16.04.2009.
5.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்( ம- I) அவர்களின் ஆய்வறிக்கை
6.புதுப்பாக்கம் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.82 நாள்.03.01.2018.
பலவகை வரவு ரசீது எண்.137 நாள்.12.01.2018.

*******

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் புதுப்பாக்கம் ஊராட்சி காஞ்சிபுரம் மாவட்டம்

உத்தரவு -

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.243/3E1, 3E2, 3F1A2, 252/1-ல் 34350ச.மீ பரப்பளவு இடத்தில் Tower – 1, 2, 3, 4, Club House ஆகிய 1154 அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட 9,23,640சதுர அடியில் அமையும் பலமாடி குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, 12.01.2018 முதல் 11.01.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு திட்ட அனுமதி வழங்கி உத்தாவிடப்படுகிறது.

இம்மனைக்கு 'A' to 'N' என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையின் உத்தேசம் பின்வருமாறு அமைகிறது.மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு கவ/நஊஇ எண்.101/2013 என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

Area Statement

| Details | Tower – 1 Block - A to J | Tower – 2,3 Block – L,N | EWS Tower-2(Block-K) Tower-3(Block-M) | Tower – 4 (Block – P,Q) | Club |
|---|---|---|---|---|---|
| Basement | Parking | Parking | Parking | Parking | Parking |
| Stilt/Ground Floor | 474.00 | Parking | Parking | Parking | 73.00 |
| 1st Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | 150.00 |
| 2nd Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | 407.00 |
| 3rd Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | 274.00 |
| 4th Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | – |
| 5th Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | – |

Scanned by CamScanner

| Details | Tower – 1 Block - A to J | Tower – 2,3 Block – L,N | EWS Tower-2(Block-K) Tower-3(Block-M) | Tower – 4 (Block – P,Q) | Club |
|---|---|---|---|---|---|
| 6th Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 7th Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 8th Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 9th Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 10th Floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 11th Floor | 4328.95 | 942.55 | -- | 930.80 | -- |
| 12th Floor | 4235.50 | 803.25 | 220 | 144 | |
| Total dwelling | 648 | 142 | | | |

OSR Area – 3435 Sq.m

இந்த அனுமதியானது பார்வை 3-ல் காணும், உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர்திட்டக்குழுமம், செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகளின்படி, 12.01.2018 முதல் 11.01.2021 வரை மூன்றாண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். மேலும் அனுமதி கட்டணம் ரூ.36,94,564/- (DD No.004303, HDFC Bank)வங்கி வரைவாக புதுப்பாக்கம் ஊராட்சி மன்றத்தில் பலவகை வரவு ரசீது எண்.137 நாள்.12.01.2018-ன் மூலம் செலுத்தப்பட்டு, அதன் நகல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டிட தொழிளாலர் நலநிதி, ரூ.5,00,000/- HDFC வங்கியில் வங்கிவரைவாக செலுத்தப்பட்டுள்ளது.(வங்கிவரைவு எண்.004306)

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் பின் பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லாக ட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.

4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதிக்கு வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.

7. கட்டிடம் கட்ட உத்தரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்தரவினை ரத்து செய்ய தனி அதிகாரிக்கு உரிமை உண்டு.

Scanned by CamScanner

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

12/1/18

தனி அலுவலர்
புதுப்பாக்கம் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

14/01/18

பெறுநர்
Thiru.R.Damodran,
17-1, Poes Road, 2nd Street,
Teynampet, Chennai - 18.

நகல் : ஊராட்சி செயலர், புதுப்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

Scanned by CamScanner

உறுப்பினர் செயலர்(பொ) மாமல்லபும் உள்ளூர் திட்டக் குழுமம், செங்கல்பட்டு
அவர்களின் நடவடிக்கைகள்.
முன்னிலை :- கி.சண்முகம், M.E.,

நாள்.27.06.2013

ந.க.எண்.42/2012/மாஉதிகு

பொருள் பலமாடி கட்டிடம் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.243/3E1, 3E2, 3F1A2, 252/1 -ல் 34350 சமீ பரப்பளவு இடத்தில் Tower -1, 2, 3, 4, Club house கொண்ட பலமாடி குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி அளிப்பது - தொடர்பாக.

பார்வை
1. மனுதாரர் திரு.R.தாமோதரன் அவர்களின் கடிதம் நாள். 22.05.2011 & 11.04.2013
2. தலைவர், புதுப்பாக்கம் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள். 07.07.2008
3. பலமாடி கட்டிட கமிட்டி கூட்டம் நாள். 03.07.2012
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.7486/09/பிஏ2 நாள்.16.04.2009
5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.21075/09/பிஏ1 நாள். 04.04.2012
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.25825/11/சிபி நாள்.22.04.2013
7. அரசாணை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.28.03.2012.
8. 133வது மாமல்லபுரம் உள்ளூர்திட்டக் குழும கூட்டத் தீர்மானம் எண்.1(C) நாள்.29.04.2013
9. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.29.04.2013 மற்றும் 24.06.2013 (OSR மற்றும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சிக் கட்டணம், நன்னிலை வரி கட்டணம் மற்றும் காலதாமத 6% வட்டி ஆகியவை செலுத்தக் கோரியது)
10. மனுதாரர் திரு.R.தாமோதரன் அவர்களின் கடிதங்கள் நாள்.24.06.2013 (அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சிக் கட்டணம், நன்னிலைவரி கட்டணம் மற்றும் 6% காலதாமத வட்டி செலுத்திய விவரம் பெறப்பட்டுள்ளது)
11. மனுதாரரால் உத்தேசம் தொடர்பான பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்த விவரம் பெறப்பட்ட நாள்.27.6.2013

***

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.243/3E1, 3E2, 3F1A2, 252/1 -ல் 34350 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு 'A' to 'N' என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் உத்தேசம் பின்வருமாறு அமைகிறது.

Area Statement

| Details | Tower -1 Block A to J | Tower – 2, 3 Block – L,N | EWS Tower- 2 (Block -K) Tower -3 (Block –M) | Tower -4 (Block –P,Q) | Club |
|---|---|---|---|---|---|
| Basement | Parking | Parking | Parking | Parking | Parking |
| Stilt/Ground floor | 474.00 | Parking | Parking | Parking | 73.00 |
| 1st floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | 150.00 |
| 2nd floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | 407.00 |
| 3rd floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | 274.00 |
| 4th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 5th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |

Scanned by CamScanner

| Details | Tower -1 Block A to J | Tower – 2, 3 Block – L,N | EWS Tower- 2 (Block -K) Tower -3 (Block –M) | Tower -4 (Block –P,Q) | Club |
|---|---|---|---|---|---|
| 6th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 7th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 8th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 9th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 10th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 11th floor | 4328.95 | 942.55 | 933.40 | 930.80 | -- |
| 12th floor | 4235.50 | 803.25 | - | 930.80 | -- |
| Total Dwellings | 648 | 142 | 220 | 144 | |

OSR Area - 3435 Sq.m

பார்வை 6-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதத்தில் உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், EWS, Club house உபயோக கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய திட்ட அனுமதி வழங்க இசைவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு கவ/ நஊஇஎண்.101/2013 என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 8-ல் கண்ட மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் 133வது கூட்டத் தீர்மானம் எண்.1(C)-ல் மேற்படி உத்தேசத்திற்கு திட்ட அனுமதி வழங்க தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 7-ல் கண்ட அரசாணையின்படி மனுதாரரிடம் அடிப்படை வசதி மற்றும் உள்ளமைப்பு கட்டணம், அபிவிருத்திக் கட்டணம் மற்றும் நன்னிலை வரி கட்டணம் மற்றும் 6% காலதாமத வட்டி ஆகியவை அரசுக்கு செலுத்தப்பட்டதற்கான விவரம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு பொது ஒதுக்கீடு திறவிடத்தினை புதுப்பாக்கம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ததற்கான விவரத்தினை, பார்வை 9-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டு, பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களும் பின்வருமாறு செலுத்தப்பட்டு அதற்குரிய உண்மை நகல் பெறப்பட்டுள்ளது.

i. அடிப்படை வ்சதி மற்றும் உள்ளமைப்பு கட்டணம் ரூ.3,29,62,500/- (21.06.2013 தேதிய கருவூலக செலுத்து சீட்டு) மற்றும் 6% காலதாமத வட்டி ரூ.329700/- (24.6.13 தேதிய கருவூலக செலுத்து சீட்டு)

ii. அபிவிருத்திக்கட்டணம் ரூ.6,78,000/- + 9,00,000/- (Indian Overseas Bank, Kodambakkam கிளையின் வரைவோலை எண்.152281 & 152283 நாள்.21.06.2013) மற்றும் 6% காலதாமத வட்டி ரூ.15,800/- (SBI,Chengalpattu கிளையின் வரைவோலை எண்.409061 நாள்.24.06.2013)

iii. நன்னிலை வ்ரி ரூ.1,23,200/- (21.06.2013 தேதிய கருவூலக செலுத்து சீட்டு) மற்றும் 6% காலதாமத வட்டி, ரூ.1,250/- (24.6.13 தேதிய கருவூலக செலுத்து சீட்டு)

iv. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு பொது ஒதுக்கீடு திறவிடத்தினை வரைபடத்தில் உள்ளவாறு ஊராட்சி மன்றத் தலைவர், புதுப்பாக்கம் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து தானப்பத்திரம் எண்.8515/13, நாள்.26.06.2013-ல் ஒப்படைப்பு செய்து அதற்கான தானப்பத்திரம் நகல் பெறப்பட்டுள்ளது.

எனவே உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள் உபயோக மனையிடத்திற்கு "A to N" என எல்லையிட்டு **மவ/மாஉதிகுஎண்.22/2013** என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையிடத்தில் அமையும் கட்டுமான வரைபடத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49(i) (ii) (iii)-ன் கீழ் **திட்ட அனுமதி எண்.32 ( 1 முதல் 23 வரை) /2013** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது.

Scanned by CamScanner

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 51-ன்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து **27.06.2013** முதல் **26.06.2016** வரை மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.

சிறப்பு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.21834/2012/சிபி நாள்.31.05.2013-ன் படி "The Project proponent / Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits, Any violation from the above requirement is liable for action under section 19 of the Enviroment (Protection) Act, 1986"
2. பொது ஒதுக்கீடு திறவிடங்களை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்படவேண்டும்.
3. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
4. மத்திய மற்றும், மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.
5. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
6. To obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the water Act 1974 for discharge of sewage.

நிபந்தனைகள்

1. உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், EWS, Club house உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்படவேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்படவேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்படவேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து - வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்புச் சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.

Scanned by CamScanner

9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 03.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10 சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு ஊராட்சி மன்றத் தலைவர், புதுப்பாக்கம் ஊராட்சி அவர்களை அனுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர், புதுப்பாக்கம் ஊராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உறுப்பினர் செயலர் (பொ),
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
செங்கல்பட்டு-1.

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
புதுப்பாக்கம் ஊராட்சி,
திருப்போரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல்
Thiru.R.Damodran,
7-1, Poes Road, 2nd Street,
Teynampet, Chennai - 18

Scanned by CamScanner

அனுப்புநர்

கி.சண்முகம், எம்.இ.,
உறுப்பினர் செயலர்,
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
13, வரதராசனார் தெரு,
வேதாசலம் நகர், செங்கல்பட்டு-1.
msmmlpa@gmail.com

பெறுநர்

Thiru. R.Damodaran
17-1, Poes Road,
2nd Street,
Teynampet,
Chennai 18.

ந.க.எண்.42 / 2012 மாஉ திகு. நாள் 2.05.2013

ஐயா

பொருள் : பலமாடி கட்டிடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - புதுப்பாக்கம் கிராமம் - சர்வே எண்கள்.243/3E1, 3E2, 3F1A2, 252/1-ல் 34350 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் Tower 1, 2, 3, 4, Club House கொண்ட பலமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்க - கட்டணங்களை செலுத்த கோருதல் - குறித்து

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண்.25825/2011/சிபி, நாள் 22.04.2013
2. மனுதாரர் திரு.V.S.Saravanan, அவர்களின் கடிதம் நாள் 22.05.2012 மற்றும் 11.04.2013
3. அரசாணை (நிலை) எண்.86 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்28.03.2012.
4. 133வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்ட தீர்மானம் எண்.1(C), நாள் 29.04.2013.

*****

மேற்காண் பொருள் தொடர்பாக உத்தேச பலமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு பார்வை 1-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதத்தில் கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டதனை தொடர்ந்து சிறப்பு நிபந்தனைகளை நிறைவு செய்யும் விவரங்களுடன் பின்வரும் கட்டணங்களை செலுத்துமாறும் தெரிவிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள் :-</u>

1. EIA Clearance should be obtained before commencement of the construction.
2. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும், சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்..
3. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
4. பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner

5. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

8. To obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the water Act 1974 for discharge of sewage.

**கட்டண விவரங்கள் :**

1. அபிவிருத்தி கட்டணம் ரூ.15,78,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து எழுபத்து எட்டாயிரம் மட்டும்) The Member Secretary, Mamallapuram Local Planning Authority, Chengalpattu என்ற தலைப்பில் செங்கல்பட்டில் மாற்றத்தக்க வகையில் வங்கி கேட்பு வரைவோலையும்.

2. நன்னிலை வரி ரூ.1,23,200/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) கீழ்க்கண்ட தலைப்பில் செங்கல்பட்டு வட்டத்திற்குட்பட்ட SBI, Chengalpattu கிளையில் மட்டுமே செலுத்தி அதன் அசல் செலுத்துச் சீட்டினையும்,

   Head of Account
   0217 Urban Development 03 IDSMT 800 others receipts. AA Director of Town and Country Planning - 1, Collection of payments for service rendered (0217-03-800-AA-0102).

3. மனுதாரர் பெயரில் ரூ.50,000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமையும் ஏதேனும் ஒரு அஞ்சலகத்தில் பெற்று அதன் நகலினை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ)
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
செங்கல்பட்டு

Scanned by CamScanner



# our services doesn't just end there

## Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

## Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

## Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

## NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

## Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate